# விஞ்ஞான மெய்யியலில் தர்க்கப் புலனறிவாதச் சிந்தனையின் வகிபங்கு: ஒரு விமர்சன ஆய்வு

*திரவியநாதன் திலீபன்*

**ஆய்வுச்சுருக்கம்**

*விஞ்ஞான வளர்ச்சி தனக்குரிய ஆய்வு நெறிகளையும் அடிப்படை நியதிகளையும் வகுத்துக்கொண்டு மேனோக்கிய பாய்ச்சலாக முன்னேற்றம் கண்டுவருகின்றது. இதனால் விஞ்ஞான விதிகள் மற்றும் கொள்கைகள் புதிய தகவல்களால் மீள் பரிசோதனைக்குள்ளாகின்றதோடு விஞ்ஞான அறிவும் வளர்ச்சியடைந்துகொண்டு செல்கின்றன. விஞ்ஞான வரலாற்றின் செல்நெறிப்போக்கில் கண்டுபிடிப்புக்கள் மற்றும் புதிதுபுனைதல்களோடு வெவ்வேறுபட்ட முறையியற் சிந்தனைகளின் தோற்றமும் அறிவுசார் வளர்ச்சியைக் கட்டமைத்திருக்கின்றன. பொதுவாக முறையியற் சிந்தனைகள் ஆரம்பகால ஆய்வுப் பாரம்பரியத்திலிருந்து செல்வாக்குச்செலுத்தியிருந்தாலும் கூட பத்தொன்பதாம் நூற்றாண்டில் புதிய மாற்றங்களுடன் எழுச்சிகண்டது. இந்நிலையில் பல்வேறுட்ட கருத்தியல்களுடன் இம்முறையியற் சிந்தனைகள் தோற்றம்பெற்று விஞ்ஞான அறிவைக் கட்டமைத்திருந்தமையும் அறியத்தக்கது. வரலாற்று நோக்கில் மொழிப் பகுப்பாய்வுச் சிந்தனைகள் தோற்றம்பெற்றதையடுத்து புதிய பரிமாணங்களுடன் தர்க்கப் புலனறிவாதச் சிந்தனையும் வளர்ச்சிகண்டிருந்தது. குறிப்பாக இம்முறையியற் சிந்தனை நவீன விஞ்ஞான வளர்ச்சிக்கும் அறிவைக் கட்டமைப்பதற்கும் ஆதாரமாக விளங்கியிருக்கின்றன. அதாவது விஞ்ஞானங்களை ஒழுங்கமைத்தல், விஞ்ஞானங்களுக்குப் புதிய அடித்தளத்தினை வழங்குதல் மற்றும் பௌதிகவதீதச் சிந்தனைகளைப் புறம்தள்ளல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு செயற்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். எனவேதான், இவ்வாய்வானது தர்க்கப் புலனறிவாதச் சிந்தனையின் சிறப்பம்சங்களினையும் விஞ்ஞான மெய்யியலில் அதன் வகிபங்கினையும் விமர்சன ரீதியாக ஆராய்கிறது. இவ்வாய்விற்கு வரலாற்று ரீதியான அணுகுமுறை, பகுப்பாய்வு முறை மற்றும் விமர்சன ஆய்வு முறை போன்ற முறையியல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு ஆய்வு தொடர்பான கட்டுரைகள், நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் இணையத்தளப் பதிவுகள் என்பன தரவுகளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.*

***திறவுச்சொற்கள்:*** *விஞ்ஞான மெய்யியல், அறிவு வளர்ச்சி, தர்க்கம், புலனறிவாதம்*

**விஞ்ஞான மெய்யியல் பற்றிய அறிமுகம்**

மனிதன் ஆரம்பம் முதல் தன்னைச் சூழ்ந்துள்ள உலகு, அதிலுள்ள பொருட்களைப் பற்றி அறிந்துகொள்ள முயன்று வந்திருக்கின்றான். இதன்போது இப்பிரபஞ்சம் விடை காணமுடியாத பல புதிர்களைக் கொண்டதாக விளங்கியிருந்தது. இத்தகைய புதிர்களைத் தேட முற்பட்டதனையே மெய்யியல் முதலில் உலகிற்கு எடுத்துக்காட்டியது. இருந்தும், ஆரம்ப கால விஞ்ஞானம் என்பது பெரும்பாலும் மெய்யியல் விசாரணைக்குள் முடங்கியிருந்தது. பின்னர் சிந்தனையாளர்களின் தொடர்ச்சியான தேடலின் பயனாக முன்னர் ஏற்றுக்கொள்ளப்பட்ட விளக்கங்கள் தவறானவை என நிராகரிக்கப்பட்டு புதிய விளக்கங்கள் வெளிக்கொணரப்பட்டன. இதுவே விஞ்ஞான வரலாற்றின் இன்று வரையிலான முன்னேற்றமாகும்.

வரலாற்று வளர்ச்சியில் மெய்யியலாளர்களைப்போல விஞ்ஞானிகளும் உண்மையைத் தேடும் ஆராய்ச்சியில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டனர். அதாவது உண்மையைத் தேடிக் கண்டுபிடித்து புத்தாக்கச் சிந்தனைகளை வெளிக் கொணர்வதையே நோக்கமாகக்கொண்டனர். இங்கு விஞ்ஞானிக்கும் மெய்யிய லாளனுக்குமுள்ள வேறுபாடு, விஞ்ஞானி அவதானத்தையும் பரிசோதனையையும் தமது பிரதான ஆய்வுப்பொருளாகப் பயன்படுத்திக்கொள்கின்றனர். இதன்படி உண்மைகளைக் கண்டுபிடிக்க மட்டுமே விஞ்ஞானம் முயலுகின்றது. "மெய்யியல் உண்மைகளைக் கண்டுபிடிப்பதில் சரியாக ஆர்வம்கொள்ளாவிட்டாலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ள உண்மைகளை ஒழுங்கமைத்து - விபரித்து - தெளிவுபடுத்தி விமர்சன ரீதியாக நோக்குதலைக் குறிக்கோளாகக் கொண்டு விளங்குகின்றது" என்கின்றார் பெனிக்ஸ் என்ற அறிஞர்.

விஞ்ஞானத்தின் முன்னேற்றம் அதனூடான வளர்ச்சி பற்றி ரஸல் கூறுகையில், "எங்கோ இருக்கும் நட்சத்திரங்கள் மற்றும் கிரகணங்கள் தொடர்பாக ஆராயும் பணியில் விஞ்ஞான ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட்டன. நியூட்டன் காலம் வரை அப்படியே நடந்தது. அடுத்தபடியாக நமக்கு நெருங்கிய மனித உடலைப் பற்றி 19ஆம் நூற்றாண்டில்த்தான் விஞ்ஞான ஆராய்ச்சிகள் தீவிரமாக வளர்ச்சியடையத் தொடங்கின. உயிரினங்கள் பற்றிய தெளிவு ஏற்பட்டது சார்ள்ஸ் டார்வினின் (Charles Darwin) பரிணாமக் கோட்பாட்டிற்குப் பின்னர்தான். இறுதியில் எல்லோருக்கும் மிக நெருக்கமான மனித மனத்தைப் பற்றிய விஞ்ஞான ஆராய்ச்சிகள் சிக்மன்ட் புரொய்டினால் மேற்கொள்ளப்பட்டதன் (Sigmund Freud) பின்னரே செல்வாக்குப்பெற்று விளங்கியது."

இவ்வாறு, படிப்படியாக வளர்ச்சியடைந்த விஞ்ஞான அறிவு பல துறைகளையும் உள்வாங்கிக்கொண்டு விரிவுபெற்றது. குறிப்பாக நியூட்டன், அல்பேர்ட் ஐன்ஸ்ரைன் போன்றோர்களது சிந்தனைகளைக் குறிப்பிடலாம். வில்லியம் தோம்ஸன் (William Thomsan) என்பவர் நியூட்டனுடைய சிந்தனைகளை வெப்பவியலுக்கு விரிவுபடுத்தி ஆய்வுகளை மேற்கொண்டார். தொடர்ந்து, விஞ்ஞானச் சிந்தனைகளில் மாற்றங்கள் உருவாகி எந்தவொரு கோட்பாடும் சரியான சோதனைச் சான்றுகளுடன் ஐயத்திற்கு

இடமின்றி நிரூபிக்கப்பட வேண்டும் என்ற சிந்தனை இக்காலப்பகுதியில் முன்மொழியப்பட்டது.

விஞ்ஞான வரலாற்றில் ஆரம்ப காலம் முதல் பிற்பட்ட காலங்கள் ஈறாகப் பல புதிய உண்மைகள் வெளிக்கொணரப்பட்டமையை இன்றுவரையிலான விஞ்ஞானத்தின் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சி தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது. இந்நிலையில் விஞ்ஞானத்தின் நோக்கம் பற்றி ஏனர்ஸ்ற் நேகல் குறிப்பிடுகையில், கண்டுபிடிப்புக்களை வழங்குவதும் முறையானதும் பொறுப்பு வாய்ந்ததுமான விளக்கங்களினை முன்வைப்பதேயாகும். விஞ்ஞான வளர்ச்சியில் புதிய உண்மைகளை வெளிக்கொணர்ந்து அறிவைக் கட்டமைப்பதில் முறையியலாளர்களினதும் விஞ்ஞானிகளினதும் பங்களிப்புக்கள் முதன்மையானதொன்றாகும். இவர்களினது இடையறாத தேடலும் புதிய உண்மையை வெளிக்கொணர வேண்டும் என்ற ஆர்வமுமே விஞ்ஞான முறையியல் வளர்ச்சிக்கு அடிப்படைகளாக விளங்கின. இவை, “விசாரணைக்குட்படுத்தாத வாழ்க்கை வாழத்தகுதியற்றது” எனும் சோக்கிரட்டீஸின் சிந்தனைக்குச் செயல்வடிவம் கொடுப்பவையாக உள்ளன.

விஞ்ஞானத்தின் செல்நெறிப்போக்கில் கண்டுபிடிப்புக்கள், புதிதுபுனைதல்கள் ஒருபுறம் வளர்ச்சியடைந்து செல்ல மறுபுறம் வெவ்வேறுபட்ட முறையியற் சிந்தனைகள் தோற்றம்பெற்று அறிவுசார் வளர்ச்சியை இன்னொரு கட்டத்திற்கு நகர்த்திச்சென்றன. விஞ்ஞான முறையியல் வளர்ச்சியில் புரட்சிகரமான சிந்தனைகளை முன்வைத்தவர்களில் கார்ள் பொப்பர் மற்றும் தோமஸ் கூன் குறிப்பிடத்தக்கவர்கள்.

பொப்பர், விஞ்ஞானம் என்றால் என்ன? எனும் வினாவிலிருந்து தமது ஆய்வுகளைத் தொடங்குகின்றார். குறிப்பாக, விஞ்ஞானமானது பின்வரும் இரண்டு எடுகோள்களை அடிப்படையாகக்கொண்டு வளர்ச்சிபெறுகின்றது என வலியுறுத்தியிருந்தார்.

1. மனித அறிவின் வளர்ச்சிக்கு எல்லையில்லை
2. என்றுமே மாறாத உண்மை என எதுவுமில்லை

வரலாற்றில் முன்வைக்கப்படும் விதியோ, கொள்கையோ பொய்ப்பிக்கப்பட வேண்டும் என்ற அடிப்படையிலேயே தமது பொய்ப்பித்தல் கோட்பாட்டினை பொப்பர் முன்வைத்தார் (*Karl Popper, 1962:54*). விஞ்ஞானமானது விஞ்ஞானக் கொள்கைகளையும் விதிகளையும் எப்பொழுதும் பரீட்சித்துக்கொண்டே இருக்கின்றது. இந்நிலை விஞ்ஞானத்தின் வளர்ச்சிப்போக்கையும் அதனூடான மாற்றத்தையும் எடுத்துக்காட்டுகின்றது. குறிப்பாக, விஞ்ஞானம் என்பது அவதானம், பரிசோதனை ஆகிய அனுபவச் சோதனைகளின் மூலம் பொய்ப்பிக்கப்படக்கூடிய அறிவே எனக் குறிப்பிடுகின்றார். அவ்வாறு பொய்ப்பிக்கப்பட முடியாதனவற்றை விஞ்ஞானமல்லாத் துறைக்குள் அடக்குகின்றார். எனவே, விஞ்ஞான அறிவைப் பொறுத்தவரையில் முடிவிலியாகத் தொடரும் தேடலில் ஊகங்களும் நிராகரிப்புமாக

வளர்ச்சியடைந்து செல்வதே சாத்தியம் எனப் பொப்பர் தெளிவுபடுத்தியிருந்தார். இதனையே பொப்பர்,

*P1→TS→EE→P2* ........... எனும் குறியீட்டில் வெளிப்படுத்தியிருந்தார்.

விஞ்ஞான வளர்ச்சியினை வரலாற்று ரீதியாக ஆராய்ந்த கூன், ஆய்வுகளின் மூலம் புதிதாக வெளிக்கொணரப்படும் ஓர் உண்மை அல்லது முடிவு காலப்போக்கில் மாற்றமடையும் என வலியுறுத்தி "கட்டளைப்படிம மாற்றம்" எனும் புதிய முறையியற் சிந்தனையை அறிமுகப்படுத்தினார். இம் முறையியல் விஞ்ஞான வளர்ச்சியில் புரட்சிகரமான மாற்றத்தினை ஏற்படுத்தியதோடு புத்தாக்க சிந்தனைகளையும் உருவாக்கியிருந்தது. விஞ்ஞான வளர்ச்சியில், பொது உண்மையான கட்டளைப் படிமம் ஒன்று நிலைநிறுத்தப்பட்டாலும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் ஆய்வுகளின் மூலம் அப்படிமம் மாற்றமடைந்து செல்லும் என்பதே வரலாற்றிலிருந்து அறிந்துகொள்ளும் உண்மையாகும். எடுத்துக்காட்டாக, தொலமியின் புவிமையக் கொள்கையினை நிராகரித்தமையினாலேயே கொப்பனிக்கஸின் சூரியமையக் கொள்கை தோற்றம்பெறலாயிற்று. இம்முறையியல் வளர்ச்சியில் பொப்பர் மற்றும் கூனைத் தொடர்ந்து பெயராபெண்ட், லக்காடோஸ் போன்ற முறையியற் சிந்தனையாளர்களின் கருத்துக்களும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியிருந்தன.

இவ்வாறாக விஞ்ஞான வளர்ச்சி தனக்குரிய ஆய்வு முறையியல்களையும் அடிப்படை நியதிகளையும் வகுத்துக்கொண்டு மேனோக்கிய பாய்ச்சலாக முன்னேற்றம் கண்டுவருகிறது. இப்பாய்ச்சலில் விஞ்ஞான விதிகள் அல்லது கொள்கைகள் புதிய தகவல்களால் மீள் பரிசோதனைக்குள்ளாகின்றன. இதனால் விஞ்ஞான அறிவு வளர்ச்சியடைந்துகொண்டே செல்கின்றது எனலாம். பௌதிகவியலுக்கான நோபல் பரிசு பெற்ற பிரிட்ஜ்மேன் (Bridgemen) என்ற அறிஞர், "விஞ்ஞானிகள் என்ன செய்கிறார்களோ அதுதான் விஞ்ஞான வழிமுறை" எனக் கூறுகின்றார். அதாவது உண்மையை அறிவதற்கு எந்தெந்த வழிகள் உள்ளனவோ அந்தந்த வழிகளை விஞ்ஞானிகள் பயன்படுத்துகின்றனர். ஆகையால் "ஒவ்வொரு விஞ்ஞானியினதும் வழிமுறை அறிவியல் முறையே" என அவர் மேலும் விரிவுபடுத்தினார்.

**புலனறிவாதம்**

சமூக விஞ்ஞான ஆய்வுகள் தோற்றம்பெற்ற காலம் முதல் அவ் விஞ்ஞான ஆய்வுகளுக்கும் புதிய உண்மைகளை வெளிக்கொணர்வதற்கும் புலனறிவாதச் சிந்தனைகள் பெரிதும் பயன்பட்டு வந்தன. இச்சிந்தனைகளின் வழிகாட்டலின் கீழ் சமூக விஞ்ஞானங்களின் அனைத்துத் துறைகளும் தம்மை விஞ்ஞானங்களாக ஆக்கிக்கொள்ள முனைந்தன. புலனறிவாதச் சிந்தனையானது,

- புலனனுபவங்களுக்கு முதன்மையளிக்கிறதுக
- விஞ்ஞானத்தின் நோக்கம் உண்மையைக் கண்டறிதல் என்கிறதுக
- விஞ்ஞான வளர்ச்சி எல்லையற்றது என்கிறதுக

- விஞ்ஞானத்தின் மாற்றம் எப்போதும் வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டது.
- அகம்சார் மதிப்பீடுகளைப் புறந்தள்ளுகின்றது.
- விஞ்ஞானம் புதிய சிந்தனையை நோக்கி வளர்ச்சியடைய வேண்டும் என்கிறது.

இப்புலனறிவாதச் சிந்தனை நேரடியாக அல்லது புலன்களால் கண்ட உண்மைகளையன்றி வேறெதனையும் கவனத்தில்கொள்ளாத தத்துவ சிந்தனையாக வலுப்பெற்று வளர்ச்சியடைந்திருந்தது. அதாவது அறியப்படாத பிரபஞ்ச இரகசியங்களைத் தேடி அறிந்துகொள்வதில் இத்தத்துவம் கவனம் செலுத்தவில்லை (சண்முகலிங்கன், 2008:08). குறிப்பாக விஞ்ஞானக் கோட்பாடுகள் யாவும் அவதானிக்கப்பட்ட உண்மைகளினூடாகவே அமையவேண்டும் என்பது இதன் அடிப்படைச் சித்தாந்தமாகும். இதுவே, ஏர்னஸ்ற் மஹ் (Ernest Mach) அனுபவத்திற்கு அப்பாற்பட்ட சிந்தனைகளை விஞ்ஞானத்திலிருந்து நீக்கி விஞ்ஞானத்தினை ஒருங்கிணைந்த நிலைக்குட்படுத்துவதே எனது நோக்கம் எனக் குறிப்பிட்டதன் தாற்பரியமுமாகும் (ஞானகுமாரன், 2003:185).

விஞ்ஞானத்தின் படிநிலை வளர்ச்சியில் ஆரம்பகாலச் சிந்தனையாளர்கள் புலன்சார் அனுபவ முறைகளைப் பயன்படுத்தி வானியல் தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொண்டு புதிய பல உண்மைகளை எதிர்வுகூறியிருந்தனர். இதில் கிரேக்கர்களின் பங்களிப்புக்கள் குறிப்பிடத்தக்கனவாகும். இவர்கள் பிறவியிலேயே அவதானத் திறனுள்ளவர்களாக விளங்கியிருந்தனர் என்பதற்கு வானியலில் மேற்கொண்ட ஆய்வுகள் எடுத்துக்காட்டுக்களாகும் (அனஸ், 2006:15). குறிப்பாக மேலைத்தேய மெய்யியலின் தந்தை என்றழைக்கப்படும் தேலீஸ், அவதானம்சார் முறைகளை அடிப்படையாகக்கொண்டு கிரகணம் தொடர்பான எதிர்வுகூறல்களை வெளிப்படுத்தியிருந்தார். இதற்கு எடுத்துக்காட்டாக, கி.மு. 585, மே மாதம் 28ம் திகதியன்று இரவானது பகலின் மீது படையெடுத்துவரும், சந்திரனானது சூரியனுக்கு முன்புறமாக வந்து நிற்கும். சூரிய ஒளி முழுவதுமே சிறிது நேரம் மறைக்கப்பட்டுவிடும்" என எதிர்வுகூறியமை இங்கு குறிப்பிடத்தக்க அம்சமாகும் (ஆர்தர், 2012:37).

பின்னாளில் புலனறிவாதச் சிந்தனையின் அடிப்படைகளை உருவாக்கிய முறையியற் சிந்தனையாளர்களில் பிரான்சிஸ் பேக்கனும் குறிப்பிடத்தக்க ஒருவராவார். இவரின் புலனுணர்வுத் தத்துவம் அனுபவமுதல்வாதச் சிந்தனைப் பள்ளியின் தோற்றுவாய்க்கு அடிப்படையாக அமைந்திருந்தது. பேக்கனுடைய இம் முறையியல் பற்றிய சிந்தனைகளே இன்றைய நவீன விஞ்ஞான முறையியலின் வளர்ச்சிக்கும் அறிவைக் கட்டமைப்பதற்கும் ஆதாரமாக விளங்குகின்றன எனக் கூறுவர்.

குறிப்பாக, விஞ்ஞான முறையியல் வளர்ச்சியில் அரிஸ்ரோட்டிலினால் முன்வைக்கப்பட்ட உய்த்தறி முறைக்கு எதிராகப் பிரான்சிஸ் பேக்கனால் தொகுத்தறி

முறை அறிமுகப்படுத்தப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும். இதனால் இவரை "தொகுத்தறி முறையின் தந்தை" என்றழைப்பர். இம்முறை எமது அனுபவத்திற்குட்பட்ட தரவுகளைத் தொகுத்து முடிவினை அனுமானிப்பதால் இது அனுபவ முறையைப் பெற்றுத்தரும் இயற்கை முறையியலாக விளங்குகின்றது என்றும் கூறிக்கொள்வர். பேக்கனைத் தொடர்ந்து வந்த பல சிந்தனையாளர்கள் குறிப்பாக கலிலியோ, காண்ட் போன்றோர்கள் தமது ஆய்வுகளில் இம்முறையியற் சிந்தனையைப் பயன்படுத்தியிருந்தமையும் அறியத்தக்கது. பிரென்சுப் பாதிரியாரான சைமன் என்பவர், "மனித அறிவு புலனறிவுவாதச் சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு விளங்குவதோடு விஞ்ஞானங்கள் புலனுக்குட்படும் தகவல்களிலிருந்து ஆய்வினைத் தொடங்க வேண்டும்" என வலியுறுத்தியிருந்தமையும் (முத்துமோகன், 2000:85) இங்கு எடுத்துக்காட்டத்தக்கதாகும்.

மேற்குறித்த படிநிலையான வளர்ச்சியைத் தொடர்ந்து சமூக விஞ்ஞானங்களில் புலனறிவாதச் சிந்தனையைப் புகுத்திய மூலகர்த்தா பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த பிரெஞ்சு மெய்யியற் சிந்தனையாளரான அகஸ்ட்டி கொம்டே (*Auguste Comte*) ஆவார். பின்னர் இவரைத் தொடர்ந்து பல சிந்தனையாளர்களால் குறிப்பாக எமிலி டொர்க்கீம் (*Emile Durkhiem*), மக்ஸ் வெபர் (*Max Weber*) போன்றோர்கள் தமது எழுத்துக்களிலும் ஆய்வுகளிலும் புலனறிவாதச் சிந்தனையைப் பயன்படுத்தியிருந்தனர்.

புலனறிவாதம் பற்றிக் குறிப்பிடும் கொம்டே, இச்சிந்தனை சமூகத்தினைப் பற்றி அறிந்துகொள்ளும் ஆய்வு முறையியலாக விளங்குகின்றதோடு (*Positivism as a methodology for the study of society*) ஓர் அதிகாரம் மிக்க சமூகவியல்சார் முறையாக (*Powerful sociological method*) விளங்குகின்றமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும் (*Ishfaq Majeed, 2019*) என வலியுறுத்தியிருந்தார்.

கொம்டே, மனித சமூகம் புலக்காட்சி அடிப்படையிலான விஞ்ஞான யுகம் (*Scientific Era*) ஒன்றை நோக்கி முன்னேறிக்கொண்டு செல்கின்றது எனக் கூறியதோடு பௌதிகம், இரசாயனம், வானியல், உயிரியல் போன்ற துறைகளைப் புலக்காட்சியை அடிப்படையாகக்கொண்டே வளர்த்தெடுக்க வேண்டும் எனவும் விதந்துரைத்தார். இதன்படி உலக வரலாறு தொடர்பாக ஆய்வினை மேற்கொண்ட கொம்டே பின்வரும் மூன்று யுகங்களாகப் பாகுபடுத்தி விளக்கியிருந்தார்.

1. இறையியல் யுகம் (*Stage of Theology*) - இது மிகப் பழமையான காலம். இறையியல் யுகத்தில் மனிதர்கள் உலகையும் வாழ்க்கையையும் இயற்கையைக் கடந்த சக்திகளால் விளக்கியிருந்தனர். இயற்கை சக்திகளுக்கு இறைநிலை கொடுத்து வழிபடும் மரபு தோற்றம் பெறலாயிற்று. அதாவது காற்றுக்கு ஒரு தெய்வம், மழைக்கு ஒரு தெய்வம், இயற்கை ஒழுங்கிற்கு இன்னொரு தெய்வமாக வழிபட்டனர். இவற்றின் விளைவாகவே பல தெய்வக் கோட்பாடு எழுச்சிபெற்றது. மேற்குறித்த கருத்தியற் சிந்தனைகளினையே வேதகாலத் தத்துவங்கள் தெளிவுபடுத்தியிருக்கின்றன.

மேலும் மனித அனுபவங்களும் ஆற்றல்களும் மேம்போக்கானவையாகக் காணப்பட்டதனால் மக்கள் இறைவனையும் சாத்தான்களையும் கொண்டு உலகைப் புரிந்துகொள்ளமுற்பட்டனர்.

2. பௌதிகவதீத யுகம் (*Stage of Metaphysic*) - இறையியல் யுகத்தோடு பௌதிகவதீத யுகத்திற்கு நெருங்கிய தொடர்புகள் காணப்பட்டன. புராண, இதிகாச ரீதியாக வழங்கி வந்த விளக்கங்களைத் தத்துவங்களாக்கித் தரமுற்பட்டது இக்கால யுகம். உலகம், வாழ்க்கை, சிந்தனை போன்ற அனைத்தையும் ஒருமைவாதக் (*Monism*) கருத்தியியலால் விளக்கிவிடமுடியும் என்ற சிந்தனை வலுப்பெற்றிருந்தது. இவ்வாறே பௌதிகவதீத யுகம் கழிந்தது எனலாம்.

3. புலனறிவாத யுகம் (*Stage of Positivism*) - உலகைப் பற்றிய ஒட்டு மொத்த உண்மையை அறிதல் என்ற நோக்கம் விட்டொழிக்கப்பட்டது. உலகின் தோற்றம், அழிவு, நோக்கம் போன்றவையெல்லாம் பொய்யானவை என்றும் அறியப்பட்டது. புலனறிவாத யுகத்தில் அவதானமும் பரிசோதனையும் முதன்மைபெற்று விளங்கியதோடு கோட்பாட்டு உருவாக்கமும் விஞ்ஞான எழுச்சியும் மிகவும் மேலோங்கிக் காணப்பட்டது (*Harriet Martineau, 2009:181*).

இவ்வாறு மூன்றாவது யுகப் புலனறிவாதச் சிந்தனையானது விஞ்ஞான ஆராய்ச்சி மற்றும் கோட்பாடு உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தியதோடு பலரது கவனத்திற்கும் உள்ளானது.

குறிப்பாக, விஞ்ஞானத்தின் அனைத்துக் கூற்றுக்களையும் கருத்தியற் சிந்தனைகளையும் புறவுலகத்தோடு தொடர்புபடுத்தி, அவை உண்மையானவையா என ஆராய்ந்து உறுதிப்படுத்துவதில் புலனறிவாதத்தின் வகிபங்கு குறிப்பிடத்தக்கதொன்றாகும். பிரான்சிஸ் பேக்கன், ஹியும் மற்றும் பொப்பர் முதலிய முறையியற் சிந்தனையாளர்கள் மேற்குறித்த தத்துவத்தில் இறுக்கமான நிலைப்பாடுடையவர்களாகக் காணப்பட்டனர். இவ்வாறு படிப்படியாக வளர்ச்சியடைந்த புலனறிவாதச் சிந்தனையானது பிற்பட்ட காலங்களில் பல்வேறு மாற்றங்களைக் கண்டது என்பதும் கவனிக்கத்தக்கது.

### தர்க்கப் புலனறிவாதத்தின் வகிபங்கு

தர்க்கப் புலனறிவாதம், அனுபவமே விஞ்ஞானத்தின் அடித்தளமாக அமையவேண்டும் என்ற கருத்தியலை அடிப்படையாகக்கொண்டு தோற்றம்பெற்றதோடு தர்க்கவியல், கணித முறைகள், மொழி அமைப்பு மற்றும் மொழிப் பகுப்பாய்வு முதலிய விடயப்பரப்புகளையும் உள்வாங்கிக்கொண்டது. அவ்வகையில், பேராசிரியர் மொறிஸ்லிக் என்பவரின் (*Mortizschlick*) தலைமையில் கணிதவியலாளர்களினதும் மெய்யியலாளர்களினதும் குழுக்கள் ஒன்றுசேர்ந்து தமது புதிய கருத்தியற் சிந்தனைகளை வெளிக்கொணரும்பொருட்டு தோற்றுவிக்கப்பட்ட சிந்தனைப்

பள்ளியே தர்க்கப் புலனறிவாதமாகும் (Logical Positivism). இக்குழுவில் ஏர்னஸ்ற் மஹ் (நுசநௌவ ஆயஉம), நியூரத் (Nurath), வைஸ்மன் (Weismann), கானப் (Carnap), ஹன்ஸ் (Hans), போன்ற பலர் அங்கத்துவம்வகித்தார்கள்.

தர்க்கப் புலனறிவாதிகளில் பெரும்பாலானோர் விஞ்ஞானிகளாகவும் விஞ்ஞானப் பயிற்சி பெற்றவர்களாகவும் இருந்ததனால், இவர்களது ஆய்வுகளில் விஞ்ஞானம் மற்றும் முறையியற் சிந்தனைகளின் தாக்கம் கூடுதலான செல்வாக்கைப்பெற்றிருந்தது. இச்சிந்தனைப் பள்ளி மேலும் வலுப்பெறுவதற்கு அக்குழுவைச்சாராத ஆனால் புலனறிவாதச் சிந்தனையை முதன்மைப்படுத்திய சிந்தனையாளர்களின் கருத்துக்களும் உள்வாங்கப்பட்டமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். அவர்களுள் பிரான்சிஸ் பேக்கன், டேவிற் ஹியூம், ஜோன் லொக், பேர்ட்ரண்ட் ரஸல், விக்கென்ஸ்டைன் போன்றோர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். பேக்கன், லொக் முதலிய சிந்தனையாளர்கள் 16ஆம், 17ஆம் நூற்றாண்டுகளில் தோற்றுவித்த புலனுணர்வுச் சிந்தனையை அளவையியல், கணித முறைகளை அடிப்படையாகக்கொண்டு புதிய நோக்கில் அணுகமுற்பட்டனர்.

தர்க்கப் புலனறிவாதம் என்பது தர்க்கத்தினையும், புலனறிவினையும் அடிப்படையாகக்கொண்டது. இதன் கருத்து அனுபவம் சார்ந்ததாகும். அதாவது காட்சிக்குட்பட்டவை மட்டுமே ஏற்கக்கூடிய உண்மைகளாகும். மாறாகக் காட்சிக்கு அப்பாற்பட்டவையும் அவை தொடர்பான கருத்துக்களும் மனிதனை மனிதன் ஏமாற்றவும், அச்சுறுத்தவும் உருவாக்கப்பட்ட கற்பனைகளாகும்க மனித அறிவின் பெரும்பாலான பகுதிகள் அனுபவம் சார்ந்தவையாக இருக்கவேண்டும் எனக் கடுமையாக தர்க்கப் புலனறிவாதிகள் வலியுறுத்தியிருந்தனர். இதனால் இவர்கள், விஞ்ஞானங்களை முறையாக ஒழுங்கமைத்தல், புதிய அடித்தளத்தினை வழங்குதல், பௌதிகவதீதச் சிந்தனைகளை மெய்யியலிலிருந்து நீக்குதல் போன்ற முக்கிய நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு செயற்பட்டனர்.

ஏனெனில், மெய்யியல் ஆய்விற்குட்படுத்துகின்ற முதன்மையான விடயப்பரப்புக்களில் பௌதிகவதீதச் சிந்தனையும் குறிப்பிடத்தக்கதொன்றாகும். பௌதிகவதீதச் சிந்தனையானது புலனுணர்வு கடந்த, காட்சி கடந்த, அனுபவத்திற்கு அப்பாற்பட்ட விடயங்களையே எடுத்தியம்புகிறது. உண்மையில், உலக அனுபவத்திற்கு அப்பாற்பட்ட பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவேண்டும் என்ற மனிதனது ஆர்வம் புலன் கடந்தும் சிந்தித்தது, அதன் விளைவாகத் தோற்றம் பெற்றதே பௌதிகவதீதச் சிந்தனையாகும் (ஜமாஹிர், 2010:22). இருந்தும், இச்சிந்தனையினால் மெய்யியலுக்கோ விஞ்ஞானத்திற்கோ எவ்விதமான பயன்பாடும் இல்லை என்பதே தர்க்கப் புலனறிவாதிகளின் முடிந்த முடிவாகும். எனவேதான், புலனறிவிற்கு முதன்மையளிக்கும் தர்க்கப் புலனறிவாதச் சிந்தனையாளர்கள் அனுபவம்சாரா பௌதிகவதீதச் சிந்தனை முற்றுமுழுதாக நிராகரிக்கப்பட வேண்டும் என விதந்துரைத்தனர் (Ishfaq Majeed, 2019).

இதனையே பேக்கன், உலகை விளக்க அளவையியல் மற்றும் கணித முறைகள் பயன்படுத்தப்பட வேண்டுமே ஒழிய கற்பனையோ, மத நம்பிக்கைகளோ அல்ல எனக் குறிப்பிட்டு நமது புலன்களுக்கு அப்பாற்பட்ட விடயங்களைப் பயன்படுத்தக்கூடாது என வலியுறுத்தியிருந்தார். மேலும் அவர், புறவுலகைப் புலன்களால் அனுபவிக்கும்போதே அறிவை நாம் பெற்றுக்கொள்கிறோம்க மனிதனின் அறிவுத் தேடலுக்கும் தத்துவச் சிந்தனைக்கும் இயற்கை முதன்மையான களமாக அமைகின்றதுக இயற்கைப் பொருட்களை ஆராய்ந்து அவற்றின் பண்புகளின் செயற்பாடுகளைக் கண்காணித்து வகைப்படுத்துவதன் மூலம் அறிவு ஆரம்பமாகிறது என்ற கருத்துக்களையும் முன்மொழிந்திருந்தார். பேக்கனின் மேற்குறித்த கருத்தியல் "எது அறிவார்ந்ததோ அது நடைமுறையில் இருக்கும்க எது நடைமுறையில் இருக்கிறதோ அது அறிவார்ந்ததாகும்" (முத்துமோகன், 2000:78) என்ற ஹெகலின் சிந்தனைக்குச் செயல்வடிவம் கொடுப்பதாக அமைகின்றது.

பதினெட்டாம் நூற்றாண்டில் பௌதிகவதீதச் சிந்தனையைத் தீவிரமான விமர்சனத்திற்குள்ளாக்கியவர்களில் அனுபவமுதல்வாதியான டேவிற் ஹியுமும் குறிப்பிடத்தக்க ஒருவராவார். இவர் தமது "வுாந ஐெநரசைல ஊழஉெநசநைெபெ ா்ரஅயெ ருனெநசளவயனெைபெ" (1748) என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: "நாம் நூல் நிலையங்களுக்குச் சென்றுபார்க்கும்போது அங்கு பௌதிகவதீதம் சார் அல்லது சமயம் சார்ந்த விடயங்கள் அதிகம் காணப்படுகின்றன. அவற்றை எடுத்துப் படிக்கும்போது குழப்பங்கள் ஏற்படுகின்றதே ஒழிய தெளிவு ஏற்படுவதில்லை. எனவே, குழப்பத்தை ஏற்படுத்தும் அத்தகைய விடயங்களைத் தீயிலிட்டுக் கொழுத்தவேண்டும் (David Hume, 1748: XIV)". மேலும், ஹியூம் தமது 'Dialogues Concerning Natural Religion' (1779) என்ற நூலில்: "கடிகாரத்திற்கு அதனை உருவாக்கிய ஒருவன் இருப்பதுபோல உலகத்தைப் படைத்தவன் ஒருவன் இருத்தல் வேண்டும் எனக் காரணகாரிய ரீதியில் எடுத்துரைப்பது ஏற்புடையதல்ல (கிருஸ்ணராஜா, 2011:84)". உண்மையில் கடிகாரம் ஒருவரால் உருவாக்கப்பட்டதென்பது அனுபவ உண்மையாகும். மாறாக இவ்வுலகத்தை ஒருவர் படைத்தார் என்பது அனுபவத்திற்கு அப்பாற்பட்டதொன்றாகும். இதன் உண்மை, பொய்யினை உரிய முறைகளைக்கொண்டு நிறுவமுடியாது என்பது ஹியுமின் கருத்தினது உட்கிடையாகும். இதனாலேயேதான் பௌதிகத்திற்கு அப்பாற்பட்ட விடயங்களை மெய்யியலிருந்து நிராகரிக்க வேண்டும் என்ற ஹியுமின் அனுபவமுதல்வாதச் சிந்தனைகள் வியன்னா வட்டத்தினரைப் பெரிதும் பாதித்திருந்தன.

பௌதிகவதீத நிராகரிப்புக் குறித்த மொழி மெய்யியலாளரான ரஸலின் கருத்துக்களும் புரட்சிகரமான மாற்றத்தினை ஏற்படுத்தியிருந்தன. ரஸல், "ஒரு சோதனைக்கு மிக அடிப்படையானது எனக் கருதப்படும் எடுப்பினை உண்மையென ஏற்பதற்கு அவ்வெடுப்பு புறத்தேயுள்ள நேர்வுடன் பொருந்துதல் வேண்டும்" என்றார். அதாவது ஓர் எடுப்பு யதார்த்தத்தின் படமாக விளங்கவேண்டும் என்பது அவரின் நிலைப்பாடாகும்.

மேற்குறித்த ரஸலின் அடிப்படையான விதிக்கு உடன்பாடற்றவைகளாகப் பௌதிகவதீத எடுப்புக்கள் பல விளங்குகின்றன ("இவ்வுலகு இறைவனால் படைக்கப்பட்டது" என்ற கூற்றினை புறத்தேயுள்ள நேர்வுகளுடன் பொருத்திப்பார்த்து அதன் உண்மை மற்றும் பொய்யினை எவ்வாறு அளவிடுவது? உண்மையில் அது அசாத்தியமற்றதொன்றாகும்). இதனையே அவர் தமது "சமயமும் விஞ்ஞானமும்" (*Religion and Science - 1961*) என்ற நூலில் பின்வருமாறு தெளிவுபடுத்துகிறார்: "பௌதிகத்திற்கு அப்பாற்பட்ட மதங்கள் பற்றிய நம்பிக்கையானது விஞ்ஞானத்திலிருந்து வேறுபட்டதுக அவற்றின் உண்மை, பொய்யினை நிர்ணயிப்பது அசாத்தியமாகும்."

ரஸலைத் தொடர்ந்து தர்க்கப் புலனறிவாதச் சிந்தனைகள் எழுச்சிபெறுவதற்கு விக்கென்ஸ்டைனின் கருத்துக்களும் அடிப்படையாக விளங்கின. குறிப்பாக, இவர் மெய்யியலில் காணப்படுகின்ற பெரும்பாலான எடுப்புகளும் கேள்விகளும் பிழையானவையும் அர்த்தமற்றவையுமாகும்க இவ் விடயங்கள் தொடர்பாக எமக்கு எவ்வித விவாதங்களும் மேற்கொள்ளமுடியாது, எனவே பேசமுடியாதவை பற்றி அமைதியாக இருக்கவேண்டும் என்பதே அவரின் நிலைப்பாடாகும் (*Wittgenstein, 1922:4.0031*).

ஆக, பௌதிகவதீதம்சார் எடுப்புக்கள் அல்லது கூற்றுக்கள் வேடிக்கைக்குரியனவாக விளங்குகின்றன என்பது விக்கென்ஸ்டைனின் நிலைப்பாடாகும். எனவே, அவற்றை உபயோகமற்றவை எனக்கூறி நிராகரிக்கமுற்படுகின்றார். மேலும், ஓர் எடுப்பு உபயோகமுள்ளது எனின் அது புலன் அனுபவத்தினை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் அவ்வெடுப்பானது சாதாரண அவதானிப்பின் மூலம் சரியானது அன்றில் பிழையானது என நிரூபிக்கத்தக்கதாகவும் இருத்தல் வேண்டும். ஆனால் பௌதிகவதீதம்சார் எடுப்புக்கள் மேற்குறித்த அடிப்படை விதியை மீறுகின்றது. இதனடிப்படையிலேயே விக்கென்ஸ்டைன் எடுப்புக்களை பின்வருமாறு வகைப்படுத்தி விளக்கியிருந்தார் (*Herbert Herring, 1977:62*).

1. அர்த்தமுள்ள கூற்று (*Meaning Statement*)
2. அர்த்தமற்ற கூற்று (*Meaningless Statement*)
3. வேடிக்கைக் கூற்று (*Amusing Statement*)

இங்கு அர்த்தமுள்ள கூற்று என்பது புலன் அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டவை. வெறுமனவே சாதாரண அவதானிப்புக்களால் அதன் உண்மை அல்லது பொய்யை அறிந்துகொள்ளமுடியும். எடுத்துக்காட்டாக, "இப்போது மழை பெய்கின்றது" இதுவொரு அர்த்தமுள்ள கூற்றாகும். இவற்றின் உண்மை தரப்பட்டதொரு சூழலில் இருந்தே பெறப்பட்டதாகும். அதாவது, மழை பெய்தால் உண்மையாகவும் அவ்வாறு நிகழாவிட்டால் பொய்யாகவும் எடுத்துக்கொள்ளப்படும்.

மாறாக, எந்தவொரு வசனமும் எவ்வித அர்த்தத்தையும் தராவிடின் அது அர்த்தமற்ற கூற்றாகக்கொள்ளப்படும். எடுத்துக்காட்டாக, "வடையும், முறுக்கும்

திருவிழாப் பார்க்கக் கோயிலுக்குச் சென்றன." என்கிற வாக்கியத்தில் எவ்விதமான இலக்கணத் தவறுகளுமில்லை, ஆனால் இது எவ்வித உண்மையையும் தருவதில்லை. இதனால் மேற்குறித்த கூற்றானது அர்த்தமற்றதாகக் கணிக்கப்படுகின்றது.

அதேசமயம், பௌதிகவதீதம் சார் எண்ணக்கருக்களை வெளிப்படுத்தும் எடுப்புக்கள் அல்லது கூற்றுக்கள் வேடிக்கைக் கூற்றுக்கள் என்றழைக்கப்படுகின்றன. ஏனெனில், அவை அனுபவத்திற்கு அப்பாற்பட்டவையே அன்றி உட்பட்டவையல்ல. எடுத்துக்காட்டாக, "இவ்வுலகு இறைவனால் படைக்கப்பட்டது" என்ற கூற்றை அனுபவத்தில் தெளிவாகச் சோதித்து அறியமுடியாது. இதனையே, விண்வெளியில் ஆராய்ச்சிகளை மேற்கொண்ட முதல் விண்வெளிப் பயணியான யூரி ககாரின் விண்வெளியைச் சுற்றிப்பார்த்த பின் "விண்ணின் எவ்விடத்தும் கடவுளைக் காணவில்லை" எனக் கூறியமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும் (கிருஸ்ணராஜா, 2011:08). எனவே, இக்கூற்று வேடிக்கைக் கூற்றேயல்லாது வேறெதுவுமில்லை என்பதாகும்.

எனவேதான், கடவுளின் இருப்புக் குறித்த அதீதம்சார் எண்ணக்கருக்களை அனுபவச்சோதனை முறைகளை அடிப்படையாகக்கொண்டு சோதித்து அறியமுடியாது என்பது மேற்குறித்த சிந்தனைகளிலிருந்து பெறப்படும் உண்மையாகும்.

தர்க்கப் புலனறிவாதிகள் தமது சிந்தனைகளை விரிவுபடுத்தும் நோக்கில் பல ஆய்வு மாநாடுகளை ஒழுங்குசெய்து புதிய கருத்துக்களைத் தொடர்ச்சியாக வெளியிட்டிருந்தனர். இதன்படி 1930ஆம் ஆண்டு ஒக்ஸ்போர்டில் நடைபெற்ற சர்வதேச மெய்யியல் காங்கிரஸ் கூட்டத்தில் "மெய்யியலின் எதிர்காலம்" (The Future of Philosophy) என்ற தலைப்பில் கருத்துரையை வழங்கிய மொறிஸ்லிக், இதுவரை காலமும் ஆராயப்பட்டும் பின் பல்வேறுபட்ட நிரூபணங்களினூடாக நிலைநிறுத்தப்பட்டும் வந்த பௌதிகவதீதச் சிந்தனைகள் மற்றும் உள்பொருள் நேர்வு குறித்த விடயங்கள் யாவும் அர்த்தமற்றவைகள் எனப் பிரகடனப்படுத்தி அவற்றினை மெய்யியலிருந்து நிராகரித்துவிட வேண்டும் என விதந்துரைத்தார்.

எனவே, மேற்குறித்த மொறிஸ்லிக்கின் கருத்தினை ஆழ்ந்து நோக்கின் மெய்யியலின் ஆய்வுப்பொருள் என்பது அனுபவ விஞ்ஞானமாக அமையவேண்டும் என்ற கருத்துப் புலனாகிறது. உண்மையில் விஞ்ஞான அறிவில் உள்ளடங்கிய கூற்றுக்கள் யாவும் அர்த்தமுடையவையாக அமையவேண்டும். இதன்படி அர்த்தமுடைய வாக்கியங்களே அறிகைப் பயன்பாடுடையவையாக விளங்குகின்றன. இவ்வாக்கியங்கள் ஒன்றில் பகுப்பாய்வாக அல்லது தொகுப்பாய்வாகக் காணப்படலாம்.

இவ்வாறாக, விஞ்ஞான மெய்யியல் வளர்ச்சியில் அனுபவம்சார் முறைகளை அடிப்படையாகக்கொண்டு அனைத்துக் கூற்றுக்களையும் வாய்ப்புப்பார்த்து அதன் உண்மைத்தன்மையினை அறிந்துகொள்வதில் தர்க்கப் புலனறிவாதிகளின் வகிபங்கு குறிப்பிடத்தக்கதாகும். அத்தோடு இவர்கள் பாரம்பரிய அறிவாராய்ச்சியியல்

முறைகளை மாற்றத்திற்குட்படுத்தி யாவற்றினையும் புதிய பரிணாமத்துடன் நோக்கவேண்டும் எனவும் விதந்துரைத்தனர்.

**வாய்ப்புப்பார்த்தல் கோட்பாடு**

தர்க்கப் புலனறிவாதிகள் பௌதிகவதீதம்சார் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் நோக்கில் "வாய்ப்புப்பார்த்தல்" (Verification) கோட்பாட்டினை உருவாக்கியிருந்தனர். வாய்ப்புப்பார்க்கும் கருத்தியற் சிந்தனையானது ஓர் எடுப்பின் அல்லது வாக்கியத்தின் உண்மை அல்லது பொய்மை அறிந்துகொள்ளும் கட்டளைக்கல்லாக நிர்ணயிக்கப்பட்டது. இச்சிந்தனை புலன்சார் அனுபவத்துடன் இடம்பெறவேண்டும் என்பதே நிபந்தனையாகும். இதன்படி விக்கென்ஸ்டைனின் "வுசயஉவயவரள டுழபைஉழ°ாடைழளழிாஉைரள" என்ற நூலானது தர்க்கப் புலனறிவாதத்திற்குப் புதியதொரு வரைவிலக்கணத்தை அளித்திருந்தது. அதாவது விஞ்ஞான எடுப்புக்களின் அர்த்தத்தை ஆராய்கின்ற மற்றும் தெளிவாக்குகின்ற ஒரு செயற்பாடே மெய்யியலாகும் (ஞானகுமாரன், 2012:193). மேற்குறிப்பிட்ட கட்டளைக்கல்லிற்குட்படாத விடயங்கள் யாவும் அர்த்தமற்றதாகக் கணிக்கப்பட்டன. ஆக, பௌதிகவதீத எண்ணக்கருக்களை "வாய்ப்புப்பார்த்தல்" கோட்பாட்டிற்குட்படுத்தி உண்மை, பொய் அறியமுடியாததனால் அவற்றை நிராகரிக்க வேண்டும் என்பதே மேற்குறித்த சிந்தனையின் அடிப்படை நோக்கமாகும்.

தர்க்கப் புலனறிவாதிகள் விஞ்ஞானத்திற்குப் புதிய சிந்தனையை வழங்கல், பௌதிகவதீதச் சிந்தனையை மெய்யியலிலிருந்து நீக்குதல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டு செயற்பட்டனர். குறிப்பாக, புலனறிவிற்கு முதன்மையளிக்கும் இச்சிந்தனையாளர்கள் புலனறிவிற்கு அப்பாற்பட்ட விடயங்களை நிராகரித்து, மெய்யியலை புதிய நோக்கில் அணுகமுற்பட்டனர். இதனாலேயே ஏங்கெல்ஸ் போன்ற சிந்தனையாளர்கள் இயக்கவியலுக்கு எதிரான இந்தக் கோட்பாடு "இயக்க மறுப்பு இயல்" எனத் தெளிவுபடுத்தியிருந்தனர் (பெரியசாமி, 2010:116).

விஞ்ஞான முறையியல் வளர்ச்சியில் பௌதிகவதீத நிராகரிப்பினைத் தீவிரப்படுத்திய சிந்தனையாளர்களுள் கார்ள் பொப்பர் குறிப்பிடத்தக்கவராவார். இவர் விஞ்ஞானத்தையும் (Science) விஞ்ஞானமல்லாதவற்றையும் (Non Science) வேறுபடுத்தும் கட்டளைக்கல்லாகப் பொய்ப்பித்தல் கோட்பாட்டை (Falsification Theory) முன்வைத்தார். இக்கோட்பாட்டின் பிரகாரம் அனுபவச் சோதனையின் மூலம் சோதித்து அறியக்கூடியவை விஞ்ஞானம் என்றும், சோதித்து அறியமுடியாதவை விஞ்ஞானம் அல்லாதன எனவும் குறிப்பிட்டார். குறிப்பாக, பௌதிகவதீதச் சிந்தனைகள் அனுபவத்திற்கு அப்பாற்பட்ட விடயத்துவங்கள் பற்றியே எடுத்துரைக்கின்றன. எனவே, இவை குறித்து எந்தவொரு விளக்கமும் தரமுடியாது. இதனாலேயே பொப்பர் போன்ற முறையியற் சிந்தனையாளர்கள் விஞ்ஞானம் என்பது அனுபவத்தில் சோதித்து அறியப்பட வேண்டும் என்ற நிபந்தனையை முன்வைத்தனர். இந்நிபந்தனைக்குட்படாத எண்ணக்கருக்கள் விஞ்ஞானமல்ல

என நிரூபிக்கப்படும் என்கிறார், பொப்பர் (முயசட ீழிநசஇ 1962:13) . இதன்படி பௌதிகவதீதச் சிந்தனையானது பொப்பரின் நோக்கில் விஞ்ஞானமல்லாத துறைக்குள் உள்ளடக்கப்பட்டிருந்தமையும் இங்கு கவனத்தில்கொள்ளத்தக்கதாகும்.

மொறிஸ்லிக் தமது "புலனறிவாதமும் யதார்த்தமும்" என்ற கட்டுரையில், வாக்கியங்களினதும் வினாக்களினதும் அர்த்தத்தைத் தெளிவுபடுத்தி உறுதிப்படுத்துவதே மெய்யியலின் சிறப்பியல்பான பணியாகும் எனக் குறிப்பிட்டார். இந்நிலையில் ஓர் எடுப்பை வாய்ப்புப்பார்ப்பதற்கு அது உண்மையானதா பொய்யானதா எனக் கண்டறிதல் இன்றியமையாததொன்றாகும். மாறாக அதன் உண்மை, பொய்யைக் கண்டறியத் தவறுவது என்பது ஓர் எடுப்பின் அர்த்தத்தைக் கண்டறியத் தவறுவதாகும். இதன்படி எத்தகைய அனுபவம் ஓர் எடுப்பை உண்மையாக்குகிறதோ அதுவே அவ்வெடுப்பின் அர்த்தமாகும். ஆனால் பௌதிகவதீத எடுப்புக்கள் அல்லது கூற்றுக்கள் மேற்குறித்த கட்டமைப்பிலிருந்து முற்றிலும் விடுபட்டவையாக காணப்படுகின்றன என்பது இதன்மூலம் கண்டறியப்படும் உண்மையாகும்.

மேலும் தர்க்கப் புலனறிவாதிகள், பௌதிகவதீதச் சிந்தனைகளை மெய்யியலிலிருந்து விலக்குவது மட்டுமன்றி அவை குறித்த நிராகரிப்பினைத் தெளிவாக எடுத்துக்காட்டுவதற்கு நியாயத்தொடை வாதம் (ளுலடடழபளைவவை ளுவயயவநஅநவெ) ஒன்றினையும் உருவாக்கியிருந்தமை கவனத்திற் கொள்ளத்தக்கதாகும். அதாவது,

எல்லாப் பௌதிகவதீதக் கூற்றுக்களும் அனுபவத்தில் வாய்ப்புப்பார்க்கமுடியாது

எல்லா வாய்ப்புப்பார்க்கமுடியாத கூற்றுக்களும் அர்த்தமற்றவை

ஆகவே, எல்லாப் பௌதிகவதீதக் கூற்றுக்களும் அர்த்தமற்றவை (அனஸ், 2006:206).

ஆக, பௌதிகவதீதம் உறுதிப்படுத்தும் மெய்ப்பொருள் அல்லது உண்மைப்பொருள் குறித்த எண்ணக்கருக்கள் யாவும் உலகு சம்பந்தப்பட்டவை அல்ல, அப்பாலானதொரு உலகு பற்றியதாகும். அவை காலத்திற்கும் இடத்திற்கும் உடன்படாதவையாகும். இவை குறித்த ஆராய்ச்சிகள் அவசியமற்றவையும் பயனற்றவையும் என்பது ஆய்வுகளின் மூலம் வெளிக்கொணரப்படுகின்றது.

எனவேதான், பௌதிகவதீத எண்ணக்கருக்களைச் சோதனை முறைகளை அடிப்படையாகக்கொண்டு அவற்றின் உண்மை, பொய்யினை அறிந்துகொள்ளமுடியாததோடு மட்டுமன்றி வாய்ப்புப்பார்த்தல் விதிக்கமையவும் அவற்றின் உண்மைத்தன்மையினை நிரூபித்துக்கொள்ளமுடியாதுள்ளது என்பதும் இதன்மூலம் வெளிக்கொணரும் உண்மையாகும். இதனாலேயேதான் ஹியும் போன்ற சிந்தனையாளர்கள், பிரபஞ்ச ஒழுங்கிற்கு ஒரு காரணம் அவசியமானது என அனுமானித்தாலும் அதற்கான புலன் தரவுகள் எதுவுமில்லை என வலியுறுத்தியிருந்தனர். யூலியன் ஹக்ஸ்லி (துரடயைெ ர்ரஒடநல) என்ற அறிஞர் "இறைதூதற்ற மதம்" (சுநடபைழைெ றவைாழரவ சுநஎநடயவழைெ) என்ற நூ

லில் விஞ்ஞான யுகத்தில் இறை நம்பிக்கை அவசியமற்றது என்று குறிப்பிட்டிருந்தமையும் இங்கு எடுத்துக்காட்டத்தக்கதாகும் (சுக்ரி, 1994:14).

**விமர்சன ரீதியான அணுகுமுறை**

வரலாற்று நோக்கில் பல சிந்தனையாளர்களால் பௌதிகவதீதம்சார் எண்ணக்கருக்கள் விமர்சிக்கப்பட்டு பின் நிராகரிப்புக்குள்ளாகி இருந்தபோதிலும் அவ் விமர்சனம் மற்றும் நிராகரிப்பு தொடர்பான கருத்தியல்கள் எத்தகைய பொருத்தப்பாடுடையதாக விளங்குகின்றன என்ற சிக்கல் எழாமலில்லை. குறிப்பாக, பௌதிகவதீதச் சிந்தனையை ஹியும், பொப்பர் மற்றும் தர்க்கப் புலனறிவாதச் சிந்தனையாளர்கள் போன்றோர் நிராகரிப்பதனால் கடவுள், ஆன்மா மற்றும் மறுவாழ்வு பற்றிய எண்ணக்கருக்களையும் ஒழுக்கவியல்சார் சிந்தனைகள், எடுப்புக்களினையும் இனக்குறைப்புச் செய்யமுற்படுகின்றனர்.

மெய்யியல் வரலாற்றில் பௌதிகவதீத எண்ணக்கருக்களைத் தீவிரமாக ஐயத்திற்குட்படுத்தி அத்தகைய எண்ணக்கருக்கள் சார்ந்த நூல்களை தீயிலிடல் வேண்டும் என ஹியும் தமது *'The Inquiry Concerning Human Understanding'* என்ற நூலில் தெரிவித்தமை அதற்குத் தக்கசான்றாகும். எனவேதான் கடவுள், ஆன்மா, மறுவாழ்வு தொடர்பான கருத்தியல்கள் அனுபவத்தைக் கடந்த மற்றும் வாய்ப்புப் பார்க்க முடியாதவையாக விளங்குகின்றன என்பது மேற்குறித்த சிந்தனையாளர்களின் கருத்துக்களிலிருந்து விளங்கிக்கொள்ளும் உண்மையாகும்.

பௌதிகவதீதம்சார் கருத்தியல்களை ஆய்விற்குட்படுத்திய இமானுவெல் காண்ட் ஹியுமினைப்போல் பௌதிகவதீதம்சார் எண்ணக்கருக்கள் குறித்து தீவிரமாகச் செயற்படாது, ”பௌதிகவதீதம் என்பது எமது சாதாரண அறிவினால் அறியப்படமுடியாது” எனக் குறிப்பிட்டிருந்தார் (Norman Kemp Smith, 1961:56). இருந்தும் காண்ட், "ஹியுமினால்தான் நான் விழிப்படைந்தேன்" எனக் கூறியமையும் இங்கு சிந்திக்கத்தக்கதாகும். உண்மையில் கடவுள், ஆன்மா, மறுவாழ்வு, பரலோகம் ஆகியவை மனித அனுபவத்திற்கு அப்பாற்பட்டு விளங்குகின்றமையால் அவை குறித்து எவ்விதத் தர்க்கமும் செய்யவியலாது. அத்தோடு பௌதிகவதீதம் பற்றிய அடிப்படைக் கேள்விகள் தொடர்பான விடயங்களைக் கோட்பாட்டறிவிற்குள் கொண்டுவரும்போது அவை வெறும் ஆதாரமற்ற, அறியமுடியாதவற்றை அறிந்துகொள்வது போன்ற பாவனையை ஒத்தது எனக் காண்ட் தெளிவுபடுத்தினார்.

பௌதிகவதீதம் தொடர்பான எண்ணக்கருக்களைப் பகுப்பாய்விற்குட்படுத்திய விக்கென்ஸ்டைன் போன்ற சிந்தனையாளர்கள் அத்தகைய எண்ணக்கருக்களை வேடிக்கைக் கூற்றுக்களாகப் புறம்தள்ளியமையும் இங்கு கவனத்தில்கொள்ளத்தக்கது. இதனையே விக்கென்ஸ்டைன் தமது "*Tractatus Logico Philosophicus'* என்ற நூலில் பேசமுடியாதவை பற்றி அமைதியாக இருக்கவேண்டும் என்கிறார். எவ்வாறாயினும் விக்கென்ஸ்டைனின் மேற்குறித்த இந்நிலைப்பாடு எவ்வளவு தூரம் சாத்தியமானது என்பதும் ஆய்விற்குரியதொன்றாகும்.

பௌதிகவதீத நிராகரிப்புக்குறித்து தர்க்கப் புலனறிவாதிகள் மற்றும் தர்க்கப் புலனறிவாதிகளல்லாத சிந்தனையாளர்களின் கருத்தியல்களை அடிப்படையாகக் கொண்டு ஏனைய துறைசார் சிந்தனைகளோடு ஒப்பிட்டு நோக்கும்போது, அவை எந்தளவிற்கு ஏற்புடையதாக விளங்குகின்றன என்பது ஆய்விற்குரிய விடயமாகும். இந்நிலையில் நியமங்கூறும் விஞ்ஞானங்களான அழகியல், ஒழுக்கவியல் இவற்றைவிட சமயம் சார்ந்த துறைகளில் பௌதிகம் மற்றும் பௌதிகவதீதம்சார் எண்ணக்கருக்கள் சொற்றொடர் மற்றும் வாக்கியங்களாக அதிகம் பயன்படுத்தப் படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது. அத்தோடு அத்துறையில் பயன்படுத்தும் மொழிசார் கூற்றுக்கள் அல்லது எண்ணக்கருக்கள் பிற துறைகளுக்கும் பரிமாற்றம் செய்யப்படுகின்றன. இதனால் குறித்த துறையோடு தொடர்புடைய எண்ணக்கருக்கள் அத்துறைசார் நோக்கில் அர்த்தமுடையதாகவும் இன்னொரு துறையில் பயன்படுத்தும்போது அர்த்தமற்றதாகவும் கொள்ளப்படலாம்.

எடுத்துக்காட்டாக, அழகியற் சிந்தனையாளர்கள் கலை - இரசனையியல் தொடர்பான பல எண்ணக்கருக்களைப் பயன்படுத்துவதைக் காண்கின்றோம். அவ் எண்ணக்கருக்கள்சார் கலைச்சொற்கள், அவை பற்றிய வரைவிலக்கணங்கள், விளக்கங்கள் என்பவை கருத்துருவ மொழிகளால் (*Abstract Languages*) கட்டமைக்கப்பட்டுள்ளமையைக் கண்டுகொள்ளலாம். அதாவது, அழகியலில் அழகு - இரசனை, ஒழுக்கவியலில் உண்மை - பொய், நன்மை - தீமை, உளவியலில் நனவிலி - கனவு". போன்ற எண்ணக்கருக்கள் சாதாரண மொழிப் பயன்பாட்டில், ஒப்பீட்டளவில் கணிசமான அளவு கருத்துருவ மொழிக்கூறுகள் புழக்கத்தில் இருப்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். எடுத்துக்காட்டாக, "வெண்ணிலா வெளியே வருவாயா", "இளைய நிலா பொழிகிறது", "மனம் என்னும் மேடையில் முகமொன்று ஆடுது" (அழகியல் மற்றும் இரசனையியல்சார் கூற்றுக்கள்), "நன்மை செய்தால் சுவர்க்கம் கிட்டும்", "நனவிலி மனம் மிகவும் விசாலமானது" போன்ற இன்னோரன்ன பல மொழிக் கூறுகளைக் குறித்த துறைசார் எண்ணக்கருக்களின் அடிப்படையிலேயே விளக்கி மற்றும் விபரித்துக் கூறிக்கொள்ள வேண்டியிருக்கிறது. இவற்றின் அர்த்தம் சாதாரண விடயம்போல் தென்பட்டாலும் இவை மேலதிக வியாக்கியானத்தினை வேண்டிநிற்கின்றன என்பதே உண்மை. மேற்குறித்த கருத்தியல்கள் பற்றி ரூடோல் கானப்பின் வார்த்தைகளில் கூறுவதாயின் முழுமையானதொன்று, நோக்கமான தொன்று, இருப்பு, சாரம், அகம், முடிவற்றது போன்ற எண்ணக்கருக்கள் யாவும் போலியானது எனக் கூறியமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்க விடயமாகும் (*Carnap, 1959:67*).

இவ்வாறாக மேற்குறித்த மொழிக்கூறுகள் வெவ்வேறு அறிவியல்சார் துறைகளின் நோக்கில் அத்துறைசார்ந்தவர்களுக்கு மிகவும் அர்த்தமுடையதாக - பயனுடையதாக விளங்கக்கூடும். இதனையே மொழியியல் அறிஞர்கள், ஒவ்வொரு மனிதரும் மொழியினால் அவரவரது மனதில் உருவாகும் தடங்களின் வழி உலகை உள்வாங்குகின்றார்கள், உணருகின்றார்கள் என்ற கருத்தியலை முன்வைத்திருந்தனர் (*Chomsky, 2006*). எனவே அத்தகைய மொழிக்கூறுகளை அர்த்தமற்றவை என

இனக்குறைப்பு செய்து நிராகரிக்கமுடியாது என்பது இங்கு எடுத்துக்காட்டத்தக்க விடயமாகும். அவ்வாறு நிராகரிப்பின் குறித்த துறைகளும் நிராகரிப்பிற்குள்ளாகும்.

சமய மெய்யியல் நோக்கில் சமய அருளாளர்கள் மற்றும் தத்துவஞானிகள் புலன்கடந்த மற்றும் பௌதிகத்திற்கு அப்பாற்பட்ட மெய்ப்பொருள் சார்ந்த உண்மைகளை அளவைப் பிரமாணங்களின் துணைகொண்டு கருத்துருவ மொழிகளால் நிறுவியிருந்தமையும் இங்கு எடுத்துக்காட்டப்பட வேண்டிய விடயமாகும். இதன்பேறாக மேலைத்தேச மற்றும் கீழைத்தேசத் தத்துவச் சிந்தனைகளில் ஒருமைவாத, இருமைவாத மற்றும் பன்மைவாதக் கருத்தியல்கள் தோற்றம்பெறலாயின. எடுத்துக்காட்டாக, இந்திய மெய்யியலில் சங்கரர் தமது அத்வைதச் சிந்தனையூடாக ஒருமைவாதத்தினை நிறுவியிருந்தமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும். சங்கரரது நோக்கில் இரண்டற்றது என்பதே அடிப்படையான உண்மைப்பொருளாகும். இது ஒன்றானதும் மாறாததும் விபரிக்கமுடியாததும் எல்லையற்றதும் எங்கும் வியாபகமானதும் புலன்களுக்கு அப்பாற்பட்டதும் (பௌதிகவதீதம்) எனப் பல்வேறுபட்ட வாதங்களினூடாக எடுத்தாண்டு (ஞானகுமாரன், 2012:31) தமது ஒருமைவாதச் சிந்தனையை விளக்கியிருந்தார். சங்கரரைத் தொடந்து வந்த வேதாந்த மற்றும் சிந்தாந்தத் தத்துவவாதிகள் மட்டுமன்றி மேலைத்தேய தத்துவங்களுட்பட இருமைவாத, பன்மைவாதச் சிந்தனைகளினூடாக மெய்ப்பொருள் சார்ந்த கருத்தியல்களை (அக்குவினஸ் - ஆன்மாக்களின இறுதி இலட்சியம் இறைவனோடு இரண்டறக்கலத்தலாகும்) நிறுவியிருந்தனர்.

மேற்குறித்த சமய சிந்தனையாளர்கள், தத்துவஞானிகள் மெய்ப்பொருள் சார்ந்த உண்மைத்தன்மையினை நிறுவுவதற்குப் பயன்படுத்திய வலிமையான ஆதாரங்களில் ஒன்றாகக் காரணகாரியவாதம் விளங்கியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும். இயற்கையில் உள்ள தோற்றப்பாடுகள் ஏன் நிகழுகின்றனக எவ்வாறு நிகழுகின்றன? என்பனவற்றை ஆராய்ந்து விளக்குவதே இதனடிப்படையாகும். அதாவது ஒவ்வொரு விளைவிற்கும் ஒரு காரணம் உண்டு, காரணமின்றி எதுவுமில்லை என்பதே மேற்குறித்த வாதத்தின் தாற்பரியமாகும். இதனையே அக்குவினஸ் (Aquinas) தமது "Summa Theologica" என்ற நூலில் "இவ்வுலகில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் அதற்கு முன்பதாக நிகழும் ஒரு நிகழ்ச்சி காரணமாக இருக்கும்" (கிருஸ்ணராஜா, 2011:81) என்றார். இதன்படி உலகில் பலவிதமான தோற்றப்பாடுகள் நடைபெறுகின்றன. அவற்றுள் ஒன்று உலக உற்பத்தியுமாகும். உலகத்திலுள்ள பொருட்கள் யாவும் குறிப்பிட்ட ஒரு காலத்தில் தோன்றி, நிலைத்து பின்னர் அழிகின்றன. எனவேதான், உலகம் தோன்றி, நிலைபெற்று பின் ஒடுங்குகின்ற செயலானது சடப் பிரபஞ்சத்தினால் இயலாத காரியமாகும். அசேதனமான அறிவற்ற உலகம் தன்னைத்தானே இயக்கும் தன்மையற்றதால் அதனைக் காரியப்படுத்த ஒரு கர்த்தா உண்டு என இறை உண்மைக்கு கீழை மற்றும் மேலைத் தத்துவங்கள் ஆதாரம்காட்டுகின்றது.

இதனையே அரிஸ்ரோட்டில் "உலகிலுள்ள எல்லா இயக்கங்களுக்கும் மூலகாரணமாக ஓர் இயக்கி இருக்கவேண்டும்" அதனையே அவர் "இயங்காத இயக்கி" (*Unmoved Mover*) எனக் குறிப்பிடுகின்றார். அரிஸ்ரோட்டிலின் இயங்காத இயக்கி என்ற கருத்தியலை மேலும் தெளிவுபடுத்தியவர்களில் இஸ்லாமிய மெய்யியற் சிந்தனையாளரான அவிசினா (*Avicenne*) குறிப்பிடத்தக்கவராவார். இக்கருத்துநிலை பின்னர் அக்குவினஸினால் மேலும் விரிவுபடுத்தப்பட்டு இறையிருப்பிற்கு மூல ஆதாரமாகக் காரணகாரியவாதம் பயன்படுத்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

காரணகாரியவாதம் குறித்து மேலைத்தேய முறையியற் சிந்தனையாளரான ஜே.எஸ்.மில் (*J.S.Mill*) "ஒருபோதும் உண்மையாக இருப்பது எப்போதுமே உண்மையாக இருக்கும் என்பதே இவ்விதியின் நோக்கமாகும்" என வலியுறுத்தியிருந்தார். அதாவது காரணமில்லாமல் உலகில் எந்தவொரு நிகழ்ச்சியும் தோன்றியதில்லை (முத்துமோகன், 2000:55). எனவேதான் இவ்வுலகத்திலுள்ள பொருட்களின் தோற்றத்திற்கும் இயக்கத்திற்கும் ஒரு காரணம் இன்றியமையாததாக விளங்குகிறது. அதுவே மெய்ப்பொருளான அல்லது பரம்பொருளான இறைவன் என இறையிருப்பை ஏற்றுநிற்கின்ற சமயங்களின் நம்பிக்கையாகும்.

மேற்குறித்த விளக்கங்களிற்கு வலுசேர்க்கும்பொருட்டு சர்வப்பள்ளி இராதாகிருஸ்ணன் போன்ற தத்துவஞானிகளின் கருத்தியலை நோக்கின் "விஞ்ஞானத்தில் காலத்திற்குக் காலம் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளின் மூலம் புதிய உண்மைகள் வெளிக்கொணரப்பட்டாலும் அவ் உண்மைகள் காலப்போக்கில் மாற்றமடைந்து புதியதொன்று தோற்றம்பெறுவதைக் காண்கின்றோம்". அளவையியல் ரீதியாக நோக்குமிடத்து விஞ்ஞான வளர்ச்சியில் பூரணமான இறுதி முடிவு என்ற கருத்திற்கு இடமேயில்லை (*Bertant Russell, 1961:14*). மாறாக மதம் மற்றும் இறையியல்சார் கருத்துக்கள் (பௌதிகவதீதம் தொடர்பான எண்ணக்கருக்கள்) உண்மைகளாக விளங்குவதோடு அதன் முடிவுகள் இறுதியானவையாகவும் முழுமையானவையாகவும் காணப்படுகின்றன எனக் குறிப்பிட்டுள்ளமை சிந்திக்கத்தக்கதாகும். இதனாலேயே அவர் குறிப்பாக, கீழைத்தேயத் தத்துவங்கள் "அழிவற்ற தத்துவங்களாக" விளங்குகின்றன எனக் குறிப்பிட்டதன் தாற்பரியமாகும்.

தர்க்கப் புலனறிவாதிகள் பௌதிகவதீதச் சிந்தனையை நிராகரிக்கும் நோக்கில் வாய்ப்புப்பார்க்கும் கோட்பாட்டை ஒரு கட்டளைக்கல்லாகப் பயன்படுத்தி அதன் உண்மை மற்றும் பொய்யை அளவிட்டிருந்தனர். இருந்தபோதிலும் அக்கோட்பாட்டை மூலமாகக்கொண்டு விஞ்ஞானக் கூற்றுக்களைப் பௌதிகவதீதச் சிந்தனைகளிலிருந்து வேறுபடுத்தி அறியக்கூடியதாயினும், எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அர்த்தமுடைய கூற்றுக்களைக் கண்டுபிடிப்பதனையே நோக்கமாகக்கொண்டு தர்க்கப் புலனறிவாதிகள் செயற்பட்டனர் எனக் கூறமுடியாது. ஏனெனில் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அர்த்தமுடையது எது, அர்த்தமற்றது எதுவென அவர்கள் அறிந்திருந்தும் அர்த்தமற்ற கூற்றுக்கள் எத்தகைய குறைபாடுடையது என்றும் அர்த்தமுடைய கூற்றுக்கள் எவ்வாறு அத்தகைய குறைபாட்டிலிருந்து விலகியிருக்கின்றன என்பதையும் எடுத்துக்காட்ட முயன்றனர். இருந்தும் அவர்களின்

அத்தகைய முயற்சியானது எவ்வளவு தூரம் பொருத்தப்பாடுடையதாக விளங்குகின்றது என்பதனைப் பிற்பட்டுவந்த விமர்சகர்கள் குறிப்பிட்டிருந்தமையும் இங்கு சுட்டிக்காட்டவேண்டும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பின் புலனறிவாதச் (Post Positivism) சிந்தனையாளர்கள், வாய்ப்புப்பார்த்தல் கோட்பாடானது குறிப்பிட்ட இலக்கு நோக்கிச் செல்கின்றது எனவும் இம்முறையானது அறுதியான உண்மைகளாக இருப்பது விஞ்ஞானத்தின் வளர்ச்சிக்குப் பொருத்தமற்றதொன்றாகக் காணப்படுகின்றது எனவும் தெளிவுபடுத்தியிருந்தனர்.

இவ்வாறாக, வரலாற்றில் தர்க்கப் புலனறிவாதச் சிந்தனைகளுக்குப் பல சவால்கள் எழ ஆரம்பித்தன. இதன்விளைவாக இன்று சமூக விஞ்ஞானங்களில் பொதுவாக கலை, இலக்கியம், சமயம் போன்ற துறைகளில் தோற்றப்பாட்டியல், இனவியல் போன்ற முறையியல்கள் மிகுந்த செல்வாக்கைச் செலுத்திவருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது ([aNjt cad;nfhl, 2011:07). இந்தவகையில் தோற்றப்பாட்டியல் சிந்தனையாளரான எட்மண்ட் ஹூஸ்ரல், புலன்கள் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் எல்லாத் தகவல்களையும் உடனடியாக நம்பிவிடமுடியுமா? என்ற கேள்வியை எழுப்புகிறார். ஏனெனில் புலன்கள் போலியான அறிவைத் தரும் சந்தர்ப்பங்களுமுண்டு. அதாவது புலனனுபவத்திற்கு முதன்மையளிக்கும் தர்க்கப் புலனறிவாதச் சிந்தனையை ஹூஸ்ரலும் கேள்விக்குள்ளாக்கினார். எனவேதான், மெய்யியற் சிந்தனையை புத்தம் புதிதாகக் தொடங்க வேண்டும் என்பதோடு அதனை அடியோடு சீர்திருத்தம் செய்யவேண்டும் எனும் கருத்து இவரால் முன்மொழியப்பட்டது.

மானிடவியற் சிந்தனையாளர்கள் புலனறிவாதச் சிந்தனையை விடுத்து மக்களின் வாழ்வு பற்றிய தகவல்களைத் தெளிவுபடுத்துவதற்கு இனவியல் சார்ந்த முறையியல்களைப் பயன்படுத்தி புதிய சிந்தனைகளை வெளிக்கொணர்ந்தனர். குறிப்பாக மேற்குறித்த சிந்தனையாளர்கள் பங்குபற்றல் முறையை அடிப்படையாகக் கொண்டு தமது கருத்துக்களை விளக்கியிருந்தனர். எடுத்துக்காட்டாக, வேடர்களின் நடத்தைகளை ஆராய விரும்பும் ஆய்வாளர்கள் அவர்களுடன் சேர்ந்து உறவாடி அன்றாட வாழ்வியலை அவதானித்து, மொழியைக் கற்று ஆய்வுகளை மேற்கொள்ளுகின்றமையைக் குறிப்பிடலாம். இவர்களின் இத்தகைய கருத்தியல்கள் யதார்த்தவாதச் சிந்தனையை அடியொற்றியதாக விளங்குகின்றமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். இவ்வாறாக தர்க்கப் புலனறிவாதச் சிந்தனையானது பிற்பட்ட காலங்களில் விமர்சனங்களுக்குள்ளாக்கப்பட்டு புதிய பல மாற்றங்களைக் கண்டுவந்தமையும் இங்கு கருத்திற்கொள்ளத்தக்கது.

**முடிவுரை**

விஞ்ஞான மெய்யியலில் வளர்ச்சியில் ஆரம்ப கால அறிவியற் சிந்தனைகளுக்கு அடிப்படையாக விளங்கியிருந்த புலனறிவாதச் சிந்தனையானது பிற்பட்ட காலங்களில் புதிய மாற்றங்கள் கண்டு தர்க்கப் புலனறிவாதச் சிந்தனையாகப்

பரிணாமமடைந்திருந்தது. இச்சிந்தனையானது விஞ்ஞானங்களை முறையாக ஒழுங்கமைத்தல் மற்றும் பௌதிகவதீதச் சிந்தனையை மெய்யியலிலிருந்து நீக்குதல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக்கொண்டிருந்தது. எவ்வாறாயினும், ஓர் எடுப்பின் உண்மையை அல்லது பொய்யை அறிவதில் அனுபவச்சான்று இன்றியமையாதது எனத் தெளிவுபடுத்தும் தர்க்கப் புலனறிவாதிகள் போன்ற சிந்தனையாளர்கள் அனுபவத்திற்கு அப்பாற்பட்ட விடயங்களை நிராகரிக்க முற்படுகின்றனர். ஆக, பௌதிகவதீதச் சிந்தனைகளை விஞ்ஞானத்திலிருந்து நீக்கி விஞ்ஞான அறிவினை ஒருங்கிணைந்த நிலைக்குட்படுத்துவதே இவர்களின் முதன்மையான நோக்கமாகும். இருந்தும் தர்க்கப் புலனறிவாதிகளின் பெதிகவதீத எண்ணக்கருக்கள் குறித்த கருத்தியல்களை முற்றாக நிராகரிப்பதால் வெவ்வேறுபட்ட துறைகளில் பயன்படுத்தப்படும் கூற்றுக்களும் வாக்கியங்களும் நிராகரிப்பிற் குள்ளாகின்ற நிலையே ஏற்படும். இத்தகைய தன்மை எந்தளவிற்கு ஏற்புடையதாக விளங்கும் என்ற கேள்வியும் எழாமலில்லை. ஏனெனில் குறித்த துறைசார் மொழிக் கூறுகளை எண்ணக்கருக்களின் அடிப்படையில் விளக்கி மற்றும் விபரித்துக் கூறிக்கொள்ளவேண்டியிருக்கிறது. இவற்றின் அர்த்தம் சாதாரண விடயம்போல் தென்பட்டாலும் இவை மேலதிக வியாக்கியானத்தினை வேண்டிநிற்கின்றன என்பதே உண்மை. இதனால்தான் மொழியியல் அறிஞர்கள் ஒவ்வொரு மனிதரும் மொழியினால் அவரவரது மனதில் உருவாகும் தடங்களின் வழி உலகை உள்வாங்குகின்றார்கள், உணருகின்றார்கள் என்ற கருத்தியலை முன்வைத்திருந்தனர். எனவேதான், விஞ்ஞானம்சார் பரந்துபட்ட துறையை தனியே புலனறிவிற்குட்பட்டது என நோக்காது அதற்கு அப்பாற்பட்டும் சிந்தித்து - ஆய்வுகளை மேற்கொண்டு புதிய கருத்தியல்களைக் கூறவேண்டிய தேவைப்பாடு ஏனைய துறைகளுக்கும் பொருத்தப்பாடுடையதாக விளங்கும் என்பது ஆய்வின் மூலம் வெளிக்கொணரப்படும் உண்மையாகும்.

**உசாத்துணை நூல்கள்**

அனஸ். எம். எஸ். எம்., 2006. மெய்யியல் - கிரேக்க காலம் தொடக்கம் தற்காலம் வரை, கொழும்பு: குமரன் புத்தகம் இல்லம்.

...... 2010. விஞ்ஞானமும் சமூக விஞ்ஞானங்களும் ஒரு முறையியல் நோக்கு. கொழும்பு: இஸ்லாமிய புக் ஹவுஸ்.

அஸ்வகோஸ்., 2002. பின்னவீனத்துவம் பித்தும் தெளிவும். சென்னை: மங்கை பதிப்பகம்.

ஆர்தர், எஸ்., 2012. அறிவியல் வரலாறு, கோவை: முகம் வெளியீடு.

இராமானுச்சாரி. இரா., 1966. அறிவு ஆராய்ச்சியியல். தமிழ்நாடு: தமிழ் வெளியீட்டகம்.

ஜமாஹிர். பி. எம்., 2010. மெய்யியல் பிரச்சினைகளும் பிரயோகங்களும். கண்டி: நதா வெளியீடு.

கிருஸ்ணராஜா. சோ., 2011. மெய்யியல் ஓர் அறிமுகம். கொழும்பு: குமரன் புத்தக இல்லம்

...... 1995. சைவ சித்தாந்த அறிவாராய்ச்சியியல், கொழும்பு: இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம்.

சர்வப்பள்ளி இராதகிருஸ்ணன்., 1979. கீழை மேலை நாடுகளின் மெய்ப்பொருளியல் வரலாறு. அண்ணாநகர்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

சண்முகலிங்கன். என்., 2008. சமூகவியல் கோட்பாட்டு மூலகங்கள். யாழ்ப்பாணம்: நாகலிங்கம் நூலாலயம்.

சிவானந்தமூர்த்தி. க., அன்ரன் டயஸ்., 1998. மெய்யியல் ஓர் அறிமுகம். புத்தூர்: அம்பாள் வெளியீட்டகம்.

சுக்ரி. எம். ஏ. எம்., 1994. மதமும் அறிவியலும். கொழும்பு: அல்-கலம் வெளியீடு.

ஞானகுமாரன். நா., 2003. மெய்யியல். யாழ்ப்பாணம்: செல்வம் வெளியீடு.

பேரியசாமி. ஆர்., 2010. பிளேட்டோ தத்துவப் பயணம். சென்னை: பாரதி புத்தகாலயம்.

முத்துமோகன். ந., 2000. ஐரோப்பிய தத்துவங்கள். சென்னை: காவ்யா வெளியீடு.

ராஜன். ப. கு., 2011. புரட்சியில் பகுத்தறிவு - மார்க்சிய தத்துவமும் நவீன அறிவியலும். சென்னை: பாரதி புத்தாகாலயம்.

ராகுல் சாங்கிருத்யாயன்., 2003. ஐரோப்பிய தத்துவவியல். சென்னை: நியூசெஞ்சரி புக் ஹவுஸ்.

நாராயணன். க., 1989. மேலைநாட்டு மெய்ப்பொருள். சென்னை: தமிழ்புத்தகாலயம்.

பிரவாதம், இதழ் - 6 (2011) கொழும்பு: சமூக விஞ்ஞானிகள் சங்கம்.

*Arthur Kenyon Rogers., 1948. History of Philosophy. Newyork: the Macmilan Company.*

*Bertant Russell., 1961. Religion and Science, Oxford University Press.*

*Chomsky. N., 2006. Language and mind (3rd ed.). Cambridge: Cambridge University Press. https://doi.org/10.1017/CBO9780511791222*

*Cook. J. W., 2000. Wittgenstein, Empiricism, and Language. New York & Oxford: Oxford University Press.*

*Carnap. R., 1959. The Elimination of Metaphysics Through Logical Analysis of Language. English translation in A.J. Ayer, ed. Logical Positivism, The free press, New York.*

*David Hume., 1748. An Enquiry Concerning Human Understanding. New York: Dover.*

*……………. 1779. Dialogues Concerning Natural Religion. London. Retrieved from https://archive.org/details/bub_gb_E7dbAAAAQAAJ/page/n17/mode/2up*

*Harriet Martineau., 2009. The Positive of Auguste Comte. Cambridge: Cambridge University Press.*

*Herbert Herring., 1977. Being and Unity in Western Philosophy. Madras: Madras University.*

*Jornal of Social Review, 2019. Vol.6, Issue.1, South Eastern University, Sri Lanka.*

*Karl Popper., 1934. The logic of Scientific Discovery. New York: London.*

*………….. 1962. Objective Knowledge. Oxford: Clarendon Press.*

*Norman Kemp Smith., 1961. Immanuel Kant's Critique of Pure Reason. London: Macmillan & Co Ltd. and Hegan Paul.*

*Wittgenstein. L., 1922. Tractatus Logico Philosophicus. Newyork: Harcourt, Brace & Company.*

*Susan Stebbing. L., 1933. Logical Positivism and Analysis. London: British Academy. Vol.XIX.*

*Ishfaq Majeed., 2019. Understanding Positivism in Social Research: A research Paradigm of Inductive Logic of Inquiry. International Journal of Research in Social Sciences. Vol.9, Issue.11*